# FIRST INFORMATI N REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 15 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 1 4 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064818

1. District மாவட்டம் : Chennai | PS: காவல்நிலையம் V&AC, CC-I | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 13/AC/2019/CC-I | Date: நாள் 4.10.2019

2. (i) Act சட்டம்: Cr. PC. — Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: Prevention of Corruption [Amendment] Act. 2018 — Sections பிரிவுகள்: 7, 7(A)
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 3.10.2019 — Date to : நாள் வரை 3.10.2019
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 15.00 hrs — Time to : நேரம் வரை 20.15 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 4.10.2019 — Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 4.10.2019 — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — A written Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத் திசையும் — Office of the Joint Transport Commissioner, Chennai North Zone, Plot No. 3823 Door No. G1-17, New Avadi Road, Anna Nagar, Chennai - 102. About 14 Km North East.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — Tmt. R. Rajalakshmi
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம் Indian
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Deputy Collector/ Dist. Inspection cell officer.
   (g) Address : முகவரி Chennai District Collectorate.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) Tmt. Dhanalakshmi, PA to JTC, Chennai North Zone, (2) Tr. Ravi, OA, Tiruttani Check Post (3) Tr. Chockalingam, OA, JTC, (4) Tr. Ulaganathan, (Tout) (5) Tr. Suresh, (Tout), (6) Tr. Mahesh, (Tout) (7) Tr. Dineshkumar, (Tout).

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach s( parate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் வி( ரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Unaccounted Money Rs. 1,26,110/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மெ த்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இ )ப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனி தனித்தாளில் இணைக்கவும்)

- Separate Sheet Enclosed -

13. Action taken : Since the above report reveals co mmission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ……… ………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………… ……………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீ டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட து / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலை யத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, dmitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந் வருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainar / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்ப /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 04.10.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at 14.00 hrs

Name: பெயர் S. Sankar……
Rank: நிலை DSP, CC-I No. எண் ……….
VLAC, Chennai-16.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

## FIR Continuation (Column – 12)

Today on 4.10.2019 at 11.30 hrs, when I was in my office, as per the instruction received from DVAC, Head Quarters, Chennai, I register a case based on the complaint and the proceedings of the Deputy Collector/District Inspection Cell Officer (I/c), Chennai District, Chennai and the proceedings runs as follows: அனுப்புநர் திருமதி.ர.ராஜலட்சுமி, துணை ஆட்சியர் / மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் (பொறுப்பு) சென்னை மாவட்டம், சென்னை-1. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. அ/554/2019 நாள் - 03.10.2019 அய்யா, பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-102, அண்ணா நகர், புதிய ஆவடி ரோடு, பிளாட் எண்.3823, கதவு எண். G-17, சென்னை வடக்கு மண்டலம், இணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை நாள் 03.10.2019 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக. சென்னை மாவட்ட ஆய்வுக்குழுமம் மற்றும் சென்னை, சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 03.10.2019-ம் தேதி சென்னை-102, அண்ணா நகர், புதிய ஆவடி ரோடு, பிளாட் எண்.3823, கதவு எண். G-17, சென்னை வடக்கு மண்டலம், இணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட கணக்கில்வராத பணம் ரூ.1,26,110/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தாராயிரத்து நூற்று பத்து மட்டும்), மாவட்ட ஆய்வுக்குழும அலுவலரால் பதிவு செய்யப்பட்ட 7 நபர்களின் வாக்குமூலங்கள் மற்றும் கூட்டுத் தணிக்கை நடவடிக்கை ஆகியவைகள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் நம்பிக்கைக்குரிய, XXXXXXXXX (Sd/-) ர.ராஜலட்சுமி, 3.10.2019 மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் (பொ) சென்னை-1. இணைப்பு- மேற்கண்டவாறு சென்னை மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் (பொறுப்பு) மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-1, காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று (03.10.2019) சென்னை-102, அண்ணா நகர், புதிய ஆவடி ரோடு, பிளாட் எண்.3823, கதவு எண். G-17, சென்னை வடக்கு மண்டலம், இணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை. இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: (1) திருமதி. ர.ராஜலட்சுமி, மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் (பொறுப்பு), சென்னை மாவட்டம், சென்னை-1. (2) திரு.S.சங்கர், காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. (3) திரு. A.சிவஆனந்த், காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. (4) திருமதி. C.சசிகலா, காவல் ஆய்வாளர், சென்னை

நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. (5) திருமதி.P.ஜெயபாரதி, காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. சென்னை-102, அண்ணா நகர், புதிய ஆவடி ரோடு, பிளாட் எண்.3823, கதவு எண். G-17 என்ற முகவரியிலுள்ள சென்னை வடக்கு மண்டலம், இணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில், அதன் எல்லைக்குட்பட்ட RTO அலுவலகங்கள், சோதனைச் சாவடிகள் மற்றும் யூனிட் ஆபிஸ் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட போக்குவரத்து விதிமீறல் சம்பந்தப்பட்ட வழக்குகள் ரெவென்யூ கலெக்ஷன், கேன்சலேஷன் பர்மிட் மற்றும் மேற்படி அலுவலகங்களில் ஒவ்வொரு மாதத்திற்கான செயல்பாடுகள் குறித்து விவரங்கள் அடங்கிய மாதத்தின் சிறு நூல் (Monthly Booklet) ஆஜர்படுத்தும் போது ஒவ்வொரு அலுவலகத்திலிருந்தும் லஞ்சம் பெறுவதாக வந்த நம்பகமான தகவலின் அடிப்படையில் மேற்படி இணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் (பொறுப்பு) மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-1, காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று (03.10.2019) மதியம் சுமார் 3 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இணை போக்குவரத்து ஆணையர் (Joint Transport Commissioner – JTC), சென்னை வடக்கு மண்டலம் அலுவலகமானது மூன்று மாடிகள் கொண்ட கட்டிடத்தின் முதலாவது தளத்தில் அமைந்துள்ளது. முதலாவது தளத்தில் நுழையும் போது வலது பக்கத்தில் இணை போக்குவரத்து ஆணையர் அவர்களின் அறையும், நுழைவாயிலின் இடது பக்கத்தில் நேர்முக உதவியாளர் (PA to JTC) அவர்கள் அறையும் அதற்கு அடுத்தாற்போல் அவரது அலுவலகமும் உள்ளது. இந்த அலுவலகத்தின் எதிர்புறத்தில் பொது கழிவறை உள்ளது. இதற்கும் இணை போக்குவரத்து ஆணையர் அறைக்கும் இடையில் ஓர் சிறிய அலுவலக உதவியாளர் அறையும் உள்ளது. மேற்படி அலுவலத்தில் கூட்டுத் தணிக்கையின் போது திரு.A.A.முத்து, இணை போக்குவரத்து ஆணையர், வடக்கு மண்டலம் அவர்கள் ஆஜரில் இருந்தார். அவரது அறையை சோதனை செய்தபோது திரு.A.A.முத்து அவர்கள் தனது சொந்த பணமாக பர்சில் ரூ.2,580/- வைத்திருந்தார். அது குறித்து கூட்டு தணிக்கை அதிகாரி விசாரிக்க தனது சொந்த செலவிற்கு வைத்திருப்பதாக கூறியதின் பேரில் அவரிடமே அந்தப் பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது அறைக்கு இடது பக்கத்தில் உள்ள நேர்முக உதவியாளர் (PA to JTC) அவர்கள் அறையை கூட்டு தணிக்கை குழுவினர் சோதனையிட்டபோது அந்த அறையில் PA to JTC திருமதி.தனலட்சுமி ஆஜரில் இருந்தார். அவர் தன்னுடைய கைப்பையில் ரூ.2070/- வைத்திருந்தார். அது தன் மருத்துவ செலவிற்கு வைத்திருப்பதாக தெரிவிக்க அந்தப்பணம் அவரிடமே வழங்கப்பட்டது. அவருடன் அந்த அறையில் திரு.ரவி, அலுவலக உதவியாளர், திருத்தணி செக்போஸ்ட் என்பவர் அவரது கையில் இரண்டு காக்கி நிற அலுவலக கவர்களை வைத்திருந்தார். அதில் ஒன்றில் கவரின் ஓரத்தில் பென்சிலால் JTC (PA) என எழுதப்பட்டிருந்தது. அந்த கவரை பிரித்து பார்க்க அதில் ரூ.10,000/- இருந்தது. அவர் வைத்திருந்த மற்றொரு காக்கி நிற

கவரை பிரித்து பார்க்க அதில் ரூ.25,000/- இருந்தது. மேலும் அவரை சோதனை செய்ததில் சட்டை பாக்கெட்டில் ரூ.7500/- வைத்திருந்தார். மேற்படி தொகைகள் குறித்து தணிக்கை குழுவினர் அவரை விசாரணை செய்ததில் தான் பணிபுரியும் திருத்தணி செக்போஸ்ட் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.விஜயகுருசாமி என்பவர் JTC அலுவலக மாதாந்திர செலவிற்காக நேர்முக உதவியாளர் திருமதி.தனலட்சுமி அவர்களிடம் கொடுக்கச் சொல்லி இரண்டு கவரில் முறையே ரூ.25,000/- மற்றும் ரூ.10,000/- கொடுத்து அனுப்பியதாகவும் அதை தான் கொடுக்க வந்தபோது தணிக்கை குழுவினர் சோதனை செய்ய வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் தனது சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.7,500/-ஐ தனது சொந்த பணம் என்றும் தெரிவித்தார். அவர் அதற்கு கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளும்படி இல்லாததால் மேற்படி ரூ.7500/-ஐயும் சேர்த்து மொத்த தொகை ரூ.42,500/-ஐ கூட்டு தணிக்கை குழுவினரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. நேர்முக உதவியாளர் அறையை ஒட்டினாற்போல் உள்ள அலுவலக அறையில் சோதனையின் போது பின்வரும் அலுவலர்கள் அலுவலில் இருந்தனர். அவர்களை சோதனை செய்த போது A-3 இருக்கையின் உதவியாளர் திரு.இன்பக்குமார் என்பவர் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.5,030/- இருந்தது. அந்த பணம் குறித்து கேட்க தனது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.5,030/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. A-1 இருக்கையின் உதவியாளர் திரு. S.சரவணன் என்பவர் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.500/- இருந்தது. அந்த பணம் குறித்து கேட்க தனது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.500/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. A-4 இருக்கையின் தட்டச்சர் திருமதி. R.லாவண்யா என்பவர் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.2,500/- இருந்தது. அந்த பணம் குறித்து கேட்க தனது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.2,500/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. ஸ்டெனோ/தட்டச்சர் திரு.G.ஆனந்தராஜ் என்பவர் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.800/- இருந்தது. அந்த பணம் குறித்து கேட்க தனது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.800/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. இணை போக்குவரத்து ஆணையாளர் திரு.முத்து அவர்களின் கார் ஓட்டுநர் திரு.N.கண்ணன் என்பவர் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.380/- இருந்தது. அந்த பணம் குறித்து கேட்க தனது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.380/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மேற்படி அலுவலக அறையில் A-1, A-4 சீட்டிற்கு எதிரில் உள்ள இரும்பு டேபிள் மீது இருந்த பேப்பர்களின் இடையில் ரூ.1500/- இருந்தது. அதற்கு யாரும் உரிமை கோரவில்லை. மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதே அறையில் இருந்த

அலுவலக உதவியாளர் திரு.சொக்கலிங்கம் என்பவரை சோதனை செய்ததில் அவர் ரூ.3,400/- வைத்திருந்தார். அதற்கான உரிய விளக்கம் தெரிவிக்காததால் மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அறையில் ஒரு மூலையில் வெள்ளை நிற சிறிய லஞ்ச் பேக் இருந்தது. அதனை சோதனை செய்ய ரூ.2210/- இருந்தது. இந்த தொகைக்கு யாரும் உரிமை கோராததால் அந்தப் பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த அறையில் நின்றிருந்த ஒரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு. உலகநாதன் த/பெ. திரு.நடராஜன், நெ.16, கல்கி நகர் மெயின் ரோடு, அரும்பாக்கம், சென்னை-106 என்று தெரிவித்து தான் சுமார் 5 வருடங்களாக ஏஜென்ட் ஆக பணி புரிவதாகவும், லைசென்ஸ் சம்பந்தப்பட்ட வேலைகளை பார்ப்பதாகவும் தெரிவித்தார். இன்றும் அது சம்மந்தமாகவே வந்திருப்பதாகவும் தெரிவித்தவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.25,500/- இருந்தது. மேற்படி தொகைக்கான விளக்கம் கேட்டபோது அவர் சரிவர விளக்கம் அளிக்காததால் அந்தப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதே அறையில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் திரு. சுவாமிநாதன் த/பெ. கோவிந்தன், நெ.103, ராஜா பிள்ளை தோட்டம், வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை-17 என்றும் தெரிவித்தார். மேற்படி நபரை சோதனை செய்ய அவரிடம் ரூ.5050/- இருந்தது. அது சம்மந்தமாக அவரிடம் விசாரணை செய்ய அவர் பதிவு எண்.TN-02-AP-5518 கொண்ட ஷேர் ஆட்டோ டிரைவர் ஆக இருப்பதாகவும் மேற்படி ஆட்டோ திருமதி.செண்பகவள்ளி என்பவருக்கு சொந்தமானது என்றும் அதற்கான வரி கட்ட விசாரிக்க வந்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளும்படி இருந்ததால் அந்தப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் வராண்டாவில் நின்றிருந்த நபரை விசாரிக்க தனது பெயர் திரு.சுரேஷ் த/பெ. சுப்பையா, நெ.3/73, கக்கன்ஜி தெரு, சித்திரை நகர், பொழிச்சலூர், சென்னை என்றும் தான் Acting Driver ஆக பணிபுரிவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ததில் அவரிடம் ரூ.24,380/- இருந்தது. இந்தப்பணம் குறித்து தணிக்கை குழுவினர் விசாரித்தபோது அவர் உரிய விளக்கம் தெரிவிக்காததால் மேல் விசாரணைக்காக அந்தப்பணம் ரூ.24,380/- கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் வராண்டாவில் நின்றிருந்த நபரை விசாரிக்க தனது பெயர் திரு.மகேஷ் த/பெ. ஏழுமலை, நெ.14, நெல்வாய் கிராமம் மற்றும் போஸ்ட், நெல்வாய், ஊத்துக்கோட்டை என்றும் தெரிவித்தவர் தான் சுமார் 1 1/2 வருடங்களாக ஏஜென்ட் ஆக பணிபுரிவதாகவும் தெரிவித்தவரை சோதனை செய்த அவரிடம் இருந்து ரூ.10,000/- தனியாகவும் மற்றும் ரூ.4200/- தனியாகவும் இருந்தது. அதில் ரூ.4200/- தனது சொந்தப்பணம் என்றும் அதை குழந்தையின் மருத்துவ செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அதனால் அந்தப்பணம் ரூ.4200/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் தனியாக வைத்திருந்த ரூ.10,000/-க்காக அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளும்படி இல்லாததால் அந்தப்பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் அவருடன் நின்றிருந்த மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் திரு.தினேஷ்குமார், த/பெ. ரவி, நெ.21/55, 35-வது ஆசாத் தெரு, G.K.M. காலனி, கொளத்தூர், சென்னை-82

என்றும் தெரிவித்தவரை சோதனை செய்த போது அவரிடம் ரூ.16,620/- இருந்தது. மேற்படி தொகைக்கான விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லாததால் விசாரணைக்காக அந்தப்பணம் கைப்பற்றப்பட்டது. இந்த கூட்டுத் தணிக்கையின் போது அலுவலக உதவியாளர் திரு.ரவி என்பவரிடமிருந்து இரண்டு கவர்கள் மற்றும் பாக்கெட்டில் வைத்திருந்த மொத்தப் பணம் ரூ.42,500/- மற்றும் இரண்டு கவர்கள், அலுவலக உதவியாளர் திரு.சொக்கலிங்கம் என்பவரிடமிருந்து ரூ.3400/-, ஒரு சிறிய லஞ்ச் பேக்கில் இருந்து ரூ.2210/-, ஸ்டீல் டேபிள் மேல் இருந்த ரூ.1500/-, திரு.உலகநாதன் என்பவரிடமிருந்து ரூ.25,500/-, திரு.சுரேஷ் என்பவரிடமிருந்து ரூ.24,380/-, திரு.மகேஷ் என்பவரிடமிருந்து ரூ.10,000/- மற்றும் திரு.தினேஷ்குமார் என்பவரிடமிருந்து ரூ.16,620/- ஆக மொத்தம் ரூ.1,26,110/- (Rs.2000x13 + Rs.500x170 + Rs.100x71 + Rs.200x33 + Rs.50X25 + Rs.20x4 + Rs.10x8 ) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அலுவலக உதவியாளர் திரு.ரவி என்பவர் இரண்டு கவர்களில் ரூ.10,000/- மற்றும் ரூ.25,000/- வைத்திருந்தது சம்பந்தமாக நேர்முக உதவியாளர் திருமதி.தனலட்சுமி என்பவரிடமும், இணை போக்குவரத்து ஆணையர், சென்னை வடக்கு மண்டலம், திரு.A.A.முத்து ஆகியோரிடம் விசாரிக்க, திரு.A.A.முத்து அவர்கள் தனக்கு எதுவும் தெரியாது என்றும், திருமதி.தனலட்சுமி அவர்கள் அந்தப் பணம் எதற்கு கொண்டு வந்தார் என்று தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தனர். இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (03.10.2019) இரவு சுமார் 8.15 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி உரிய முறையில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின்போது நேர்முக உதவியாளர் திருமதி. தனலட்சுமி, அலுவலக உதவியாளர் திரு.ரவி, அலுவலக உதவியாளர் திரு.சொக்கலிங்கம், திரு.உலகநாதன், திரு.சுரேஷ், திரு.மகேஷ், திரு.தினேஷ்குமார் ஆகியோரிடம் தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது.

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திருமதி.ர.ராஜலட்சுமி,
மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் (பொறுப்பு),
சென்னை மாவட்டம்,

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திரு.S.சங்கர்,
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
சென்னை நகரப் பிரிவு-1, ஊ.த.க.துறை.

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திரு.A.A.முத்து, JTC, North Zone.

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திருமதி.தனலட்சுமி, PA to JTC, North Zone.

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திரு. A.சிவஆனந்த்,
காவல் ஆய்வாளர், CC-I, V&AC, Chennai.

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திருமதி. C.சசிகலா,
காவல் ஆய்வாளர், CC-I, V&AC, Chennai.

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திருமதி.P.ஜெயபாரதி,
காவல் ஆய்வாளர், CC-I, V&AC, Chennai.

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திரு.ரவி, அலுவலக உதவியாளர்

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திரு.சொக்கலிங்கம், அலுவலக உதவியாளர்

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திரு.உலகநாதன் த/பெ. திரு.நடராஜன்

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திரு.சுரேஷ் த/பெ. சுப்பையா

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திரு.மகேஷ் த/பெ. திரு.ஏழுமலை

(ஒப்பம்/-XXX) 03/10/2019
திரு.தினேஷ்குமார் த/பெ. திரு.ரவி

Received a copy
(ஒப்பம்/-XXX) திரு.A.A.முத்து, 03/10/2019

Sir, Received the above complaint and registered a case in V&AC, CC-I Crime No.13/2019/AC/CC-I, u/s 102 Cr.PC, 7 & 7 A of Prevention of Corruption (Amendment) Act 2018 on 4.10.2019 at 11.30 hrs.

(S.Sankar)
Deputy Superintendent of Police,
Chennai City-I Detachment,
Vigilance and Anti-Corruption,
Chennai-16.